கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2025ம் வருடம் பிப்ரவரி மாதம் 26ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.1/2023
இன்
அசல் வழக்கு எண்.44/2018
* * * *

சண்முகம் ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

1. சுப்பையா கோனார்
2. சபரிநாதன் (எ) சபரிராஜா
3. மணிமேகலை
4. மீனாட்சி
5. செல்வம்
6. உமா மகேஸ்வரி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 18.02.2025–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.கந்தன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ரமணி துரை அவர்கள் ஆஜராகியும், 6ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.K.மாதவன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்திற்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் கட்டளை 9 விதி 9ன் கீழ் கடந்த 03.12.2021ல் வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கான O.S.44/2018 வழக்கை திரும்ப கோப்பிற்கு எடுக்கவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.**

1.1) கடந்த 03.12.2021ல் வாதியின் மகள் பிரசவத்திற்காக வாதி மருத்துவமனையில் இருந்துவிட்ட காரணத்தால் அசல் வழக்கில் ஆஜராக முடியவில்லை என்றும், எனவே, வாதியின் வருகையின்மையானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், அசல் வழக்கை திரும்ப கோப்பிற்கு எடுக்கவேண்டும் என்றும் மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

1.2) இவ்வழக்கில் 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுவை அனுமதிக்க ஆட்சேபனை இல்லை என்று மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில், இவ்வழக்கானது காலவரையறைக்குப்பட்டு தாக்கல் செய்யவில்லை என்றும், காலவரையறைச்சட்டம் பிரிவு 5ன் கீழ் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மனுதாரர்/வாதி அசல் வழக்கை நடத்த தயாராக இல்லாமல் மூன்று ஆண்டுகள் கடந்து இம்மனுவை தாக்கல் செய்தது சட்டப்படியானது இல்லை என்றும் எனவே, மனுதாரர்/வாதியின் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**2) தீர்வு:–**

இருதரப்பும் வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யவில்லை.

மனுதாரர்/வாதியின் இம்மனுவை அனுமதிப்பது குறித்து பரிசீலனை செய்கையில்,

**SUO MOTU WRIT PETITION (C) No.3/2020**

**Dated:10.01.2022**

...மேற்படியான மாண்பமை இந்திய உச்சநீதிமன்ற வழக்கின் முன்தீர்ப்பில் 15.03.2020 முதல் 28.02.2022 வரையான காலங்களில் ஏற்படும் காலதாமதங்களை கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கூறப்பட்டுள்ளதை கருத்தில்கொண்டும், மேற்படி அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட காலமான 03.12.2021 ஆனது கோவிட் 19 பெருந்தொற்று காலமாக உள்ளதை கருத்தில்கொண்டும் மனுதாரர்/வாதி மனுவில் கூறியுள்ள காரணத்தை ஏற்றும் இம்மனுவானது உரிய காலத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை கருத்தில்கொண்டும் இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 26.02.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.02.26 16:28:52 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**<u>இணைப்பு:–</u>**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.02.26 16:29:01 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருமங்கலம்.**

இடைநிலை மனு எண்.1/2023
அசல் வழக்கு எண்.44/2018
பொது வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 26.02.2025